சேர்வைகாரரும் என்ன ஆனாங்கள்'னே தெரியலே. அவங்க என்னென்னைக்கி வந்து நம்ம சீமையை மீட்டப் போறாங்களோ? நமக்கு என்னென்னிக்கி விடிவு காலம் புறக்கப்போவுதோ? எல்லாம் ஒரே குழப்பமா இருக்கு.

கிராம. 2 : நமக்கு எங்கே தம்பி பொழுது விடியப் போவுது? நமக்கெல்லாம் இந்தக் கட்டை பூமியிலே சாயிற அன்னைக்கித்தான் விடிவு காலம். அதுவரையிலே வாரவன் போறவனுக்கெல்லாம் நாம் வாய்க்கரிசி போட்டுட்டு, நாம் மட்டும் ஈரமண்ணைத் தின்னுட்டுக் கிடக்கிறதுதான் நம்ம தலைவிதி.

கிராம. 1 : (திடுக்கிட்டு எழுந்தவனாக) அண்ணண்ணே! அதோ பாரு. அந்தக் கொலைகாரப் பாவிங்க வாராங்கண்ணே, ஓடு ஓடு!

(ஓட முயல்கிறான். அதற்குள் சிப்பாய்களும் குத்தகைக்காரச் சிப்பாயும் ஓடிவந்து கிராமவாசி - 1ஐப் பிடித்துக் கொள்கிறார்கள். கிராமவாசி - 2 பயந்து நடுநடுங்கி நிற்கிறான்).

சிப். 3 : டேய், பயல்களா? ஓடவா பார்க்கிறீங்க? கிஸ்திப் பணத்தைக் கட்டாமல் டபாய்க்கவா பார்க்கிறே? எத்தனை நாளைக்குத்தான் இப்படி டபாய்க்கலாம்னு பார்த்தே? டேய், சிப்பாய்களா? இவனுக ரெண்டுபேரையும் புடிச்சிக் கட்டுங்கடா!

(சிப்பாய்கள் 1ம் 2ம் கிராமவாசிகளைப் பின்புறமாகக் கைகளைக் கட்டி நிறுத்துகிறார்கள்).

கிராம. 2 : (பரிதாபமாக) எசமான்!

சிப். 3 : என்னடா எசமான்? கிஸ்திப் பணத்தைக் கேட்டு வந்தா இன்னிக்கி நாளைக்கின்னு ஏய்க்கவா பார்க்கிறே?

கிராம. 2 : எசமான்! நவாப்புச் சாய்பு! இந்த ஒரே ஒரு தவா மட்டும் எனக்கு மாப்புக் குடுங்க. இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே...

சிப். 3 : ஒரு நாழிகூட இனிமேப் பொறுக்க முடியாது. இப்போதே பணத்தை எண்ணிக் கீழே வைக்கணும். இல்லே, பிறகு உன் ஆடு, மாடு, வீடு வாசல், கோழி எல்லாம் பறிமுதல் ஆயிடும். பாத்துக்க!

கிராம. 2 : இந்தாங்க சாய்பு. இப்படித் திடுதிப்புன்னு வந்துகேட்டா, நாங்க பணத்துக்கு எங்கே போவோம்? கொஞ்சம் தயவு பண்ணுங்க, உங்க காலைப் புடிச்சிக் கேட்டுக்கிறேன். உங்க புள்ளை குட்டிக எல்லாம் நல்லாயிருக்கணும்.

சிப். 3 : என் புள்ளைகுட்டிகள்லாம் நல்லாத்தான் இருக்கு! சரிசரி. உங்கிட்டே பேசிக்கிட்டு நிக்க எனக்கு நேரமில்லே. டேய் சிப்பாய்! இந்த ஆடு கோழியை யெல்லாம் இழுத்துக் கொண்டு வாடா. வீட்டுக்குள்ளே போய் சட்டி பொட்டியை யெல்லாம் தூக்குடா!

(ஒரு சிப்பாய் வீட்டினுள் செல்கிறான். இன்னொருவன் ஆட்டை அவிழ்க்கிறான். வீட்டுக்குள் சென்றவன் ஒரு சோற்றுச் சட்டியைத் தூக்கிவந்து வெளியில் போட்டு உடைக்கிறான். இதைக் கண்டு பதறுகிறான் கிராமவாசி - 2).

கிராம. 2 : (பதறிப்போய்) இதென்ன அநியாயம்! அய்யா, சாய்பு! என் முதுகிலே அடியுங்க; பட்டுக்கிடறேன். வயித்திலே அடியாதிங்க! இப்படிச் சோத்துச்

சட்டியை தூக்கி உடைக்கிறீங்களே! இது நியாயமா? தெய்வத்துக்குப் பொறுக்குமா?

சிப். 3 : என்ன சொன்னே? தெய்வத்துக்குப் பொறுக்குதா, பொறுக்காதான்னு பார்ப்போம்.

(கிராமவாசி -2இன் கன்னத்தில் ஓங்கி அறைகிறான். கிராமவாசி - 2 அடி பொறுக்கமாட்டாமல் அலறுகிறான். இதைக் கண்டு சினந்து குமுறிய கிராமவாசி எதிர்த்துச் சாடி முறைக்கிறான்).

கிராம. 1 : இதென்னய்யா அநியாயம்? பெரிய மனுசனைப் போட்டு இப்படி அடிக்கிறியே! நீ அவரு புள்ளை வயசுக்குப் பொறுவியா? நவாப் தர்பாருன்னா என்ன? உங்க பாவட்டா அவ்வளவுக்கா கொடிகட்டிப் பறக்குது? நியாய அநியாயம் ஒண்ணுமே கிடையாதா?

சிப். 3 : (கிராமவாசி - 1 இடம் திரும்பி) யாரடா இவன்? சீ! நாயே! என்ன வாய்த்துடுக்கடா உனக்கு? நவாப்பைப் பத்திப் பேச உனக்கு என்ன நாக்குத் துணிச்சல்? உனக்கு அவ்வளவு திமிரா? அத்தனை வாய்க்கொழுப்பா? உன் திமிருக்கு என்ன கிடைக்கிறது பார்!

(சிப்பாய் 3- கிராமவாசி - 1ஐத் தனது கையிலிருந்த சவுக்கினால் அடிக்கத் தொடங்குகிறான்.)

கிராம. 1 : (அலறியவாறே) ஐயோ, கடவுளே! என்னைக் கொல்றானே! ஐயோ! அப்பா! - அம்மா! - தெய்வமே! கேட்க நாதியில்லையா? - யாத்தா!...

(அடி விழுந்துகொண்டிருக்கும்போதே அங்குத் திடீரென்று சின்ன மருது உருவிய வாளுடன்

வந்து குதித்து, சிப்பாய் 3-ஐக் கீழே தள்ளி, அவன் கையிலிருந்த சவுக்கைப் பிடுங்குகிறான். சின்ன மருது தன் முகத்தையும் உடம்பையும் கறுப்புத் துணியால் அடையாளம் தெரியாமல் போர்த்தி மூடியிருக்கிறான்).

சின்ன : நிறுத்துடா பயலே! தட்டிக்கேட்க ஆளில்லை என்ற தைரியமாடா உனக்கு?

சிப். 3 : (கீழேயிருந்து எழுந்து நின்றவாறே) யாரடா நீ? என் வேலையிலே குறுக்கிட உனக்கு என்ன தைரியம்? யாரடா நீ?

சின்ன : யாரோ? நான்தான் உன் எமன். உங்கள் கூட்டத்துக்கே எமன்! (சிப்பாய்களிடம் திரும்பி) டேய், சிப்பாய்களா? மரியாதையாக இவர்களைக் கட்டவிழ்த்து விடுங்கள். அந்த ஆட்டையும் அவிழ்த்த இடத்தில் திரும்பவும் கட்டுங்கள்! (அவர்கள் தயங்குவதைக் கண்டு) என்னடா முறைக்கிறீர்கள்? அவிழ்த்து விடுகிறீர்களா, இல்லையா?

(கையிலுள்ள சவுக்கினால் ஓங்கிச் சொடுக்கி அவர்களை அறைகிறான். உடனே சிப்பாய்கள் 1-ம் 2-ம் கட்டுகளை அவிழ்த்துவிடுகிறார்கள். ஆட்டையும் கட்டில் காலில் கட்டுகிறார்கள்).

சிப். 3 : என்னடா, தொடை நடுங்கிப் பயல்களா; என்ன விழிக்கிறீர்கள்? பிடியுங்கடா இந்த அயோக்கியப் பயலை!

(சிப்பாய்கள் 1-ம் 2-ம் வாளை உருவிக்கொண்டு சின்ன மருதுவை நெருங்குகிறார்கள். சின்ன மருது உஷாராகி விடுகிறான்).

சின்ன : டேய், சிப்பாய்களா! உங்களிடம் பிடிபடுவதற்கு என்னையும் அந்த அப்பாவி ஆடு என்று எண்ணிச்

கொண்டீர்களா? டேய், சிப்பாய்! கிட்டே நெருங்காதே, நெருங்கினால் உங்கள் ஒருவர் தலைகூட மிஞ்சாது ஜாக்கிரதை!

(சிப்பாய்கள் சின்ன மருதுவைத் தாக்க முனைகிறார்கள். சின்ன மருது அவர்களை எதிர்த்து வாட்போர் புரிகிறான். கடைசியில் சிப்பாய்கள் மூவரும் சின்ன மருதுவைச் சமாளிக்க முடியாமல் திடீரென்று ஓட்டம் பிடிக்கிறார்கள்).

ஓடுங்கடா, பயந்தாங்கொள்ளிப் பயல்களா! திரும்பியா பார்க்கிறாய். ஓடடா, ம்? (அவர்கள் ஓடியபின்பு மெல்லச் சிரித்து) வெறும் சோற்றுப் பட்டாளம். ஓடிவிட்டார்கள்! (வாளை உறையில் இடுகிறான்).

கிராம. 2 : (சின்ன மருதுவை வணங்கி) ஐயா! கடவுள் மாதிரி வந்து எங்களைக் காப்பாத்தினீங்களே. நீங்க யாரு?

சின்ன : பெரியவரே, நான் கடவுள் அல்ல. உங்களில் ஒருவன்தான்! இதோ பாருங்கள், என்னைத் தெரிகிறதா?

(முகத் திரையை விலக்குகிறான்).

கிராம. 1 : (வியந்து) அண்ணே! இது நம்ம சின்ன மருது சேர்வைல்லா!

கிராம. 2 : சின்ன மருதுங்களா? (கையெடுத்துக் கும்பிடுகிறான்).

சின்ன : ஆம். சின்னமருதுதான். துரதிருஷ்டத்தால் உங்களையெல்லாம் இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டு, தூரதொலையிலே வசித்துவரும் ஆங்கள் சேனைத் தலைவன் சின்ன மருதுதான்.

கிராம. 2 : ஐயா, மருதையா! நீங்க இப்படி உசுருக்குப் பயப்படாம, துணிஞ்சி வந்துட்டீங்களே. இப்படி நீங்க வரலாமா? நீங்க வந்த விசயம் அந்தப் பயல்களுக்குத் தெரிஞ்சா -? வாங்க உள்ளே.

சின்ன : இல்லை, பெரியவரே, நான் சீக்கிரமே போக வேண்டும். நான் வந்த காரியம் இதுதான். நமது சிவகங்கைச் சீமையிலிருந்து இந்த நவாப்புச் சிப்பாய்களை விரட்டியடித்து, நாம் மீண்டும் நமது ஆட்சியை இங்கு நிறுவியாக வேண்டும். அதுபற்றி உங்களையெல்லாம் சந்தித்துப் பேசவே இங்கு வந்தேன்.

கிராம. 1 : அப்படிங்களா? இப்போதே உத்தரவு கொடுங்கள். இப்போதே ஊரை ஒன்றுதிரட்டி, இந்தப் பயலுகளை ஒழிச்சிக்கட்டிப்பிடுவோம்!

சின்ன : தம்பி, இவர்களை ஒழித்துக்கட்டுவது அவ்வளவு லகுவான காரியம் அல்ல. அதற்கும் நாம் திட்டமிட்டே செயலாற்ற வேண்டும். சரி, நான் இங்கேயே நின்றுகொண்டிருப்பது ஆபத்து. அந்தப் பயல்கள் ஆட்களைத் திரட்டிக்கொண்டு திரும்பவும் வரக்கூடும். நான் வந்த விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்.

இன்றிரவு பத்து நாழிகைப் பொழுதுக்குமேல் நீங்கள் நமது நகரத்தின் முக்கியஸ்தர்களை யெல்லாம் அழைத்துக்கொண்டு, ஊருக்குக் கிழக்கேயுள்ள ஆவாரங்காட்டுக்கு வந்து சேருங்கள். இந்த ரகசியம் எந்த விதத்திலும் வெளியே தெரிந்துவிடக் கூடாது. தெரிந்தால் பேராபத்து.

Scanned with CamScanner

கிராம. 1 : ஆகட்டும் மருதண்ணே. எல்லாத்துக்கும் நானே சொல்லிக் கூட்டிட்டு வந்திடறேன்.

சின்ன : ஆமாம். காதோடு காது வைத்தாற்போல் காரியம் நடக்க வேண்டும். சரி, நான் வருகிறேன்; பிறகு சந்திப்போம். வரட்டுமா பெரியவரே!

கிராம. 2 : பதனமாப் பாத்துப் போங்க, மருதையா!

(சின்ன மருது போகிறான்).

- திரை -

## காட்சி – 13

இடம் : (திண்டுக்கல்) கோட்டை உட்புறம்.

பாத்திரங்கள் : வேலு நாச்சியார், வெள்ளைமருது, சின்ன மருது.

(காட்சி ஆரம்பத்தில் வேலு நாச்சியாரும் வெள்ளை மருதுவும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்).

வேலு : பிரதானியாரே, தங்கள் தம்பி சின்ன மருதுவிடமிருந்து தகவலே இல்லையே. போன இடத்தில் ஏதாவது அபாயம், ஆபத்து -

வெள்ளை : மகாராணி! அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. அபாயம் நிறைந்த இடத்தில் பழகுவதென்பது என் தம்பிக்கு ஒரு

விளையாட்டு. அவனுக்கு ஒன்றும் நேராது. ஆனால் போன காரியத்தைச் சரிவரக் கவனிக்காமல் வரமுடியுமா?

வேலு : எனக்கென்னவோ பயமாகத்தான் இருக்கிறது.

(இந்தச் சமயத்தில் கதவு தட்டும் ஓசை கேட்கிறது).

யாரது?

சின்ன : (வெளியிலிருந்தவாறே) நான்தான் அண்ணா.

வெள்ளை : பார்த்தீர்களா, மகாராணி! தம்பிவந்துவிட்டான்.

(எழுந்து சென்று கதவைத் திறந்துவிட்டு, சின்ன மருதுவுடன் உள்ளே வருகிறான்).

வா, தம்பி. உனக்கு ஆயுசு நூறு. இப்போதுதான் உன்னைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். சரி, போன காரியம் என்ன ஆயிற்று? காயா, பழமா?

சின்ன : பழம்தான் அண்ணா! (இராணியிடம்) மகாராணி. நமக்கு விடிவு காலம் சீக்கிரமே வரப்போகிறது.

வெள்ளை : சரி, விஷயத்தைச் சொல்.

சின்ன : அண்ணா! சிவகங்கைச் சீமையிலுள்ள மக்கள் அனைவரும் நாம் என்று வருவோம், என்று வருவோம் என்று எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நவாபின் குத்தகைக்காரன் செய்யும் அட்டூழியங்களைப் பொறுக்கமாட்டாமல் ஜனங்களே கொதித்தெழுந்து நிற்கிறார்கள். குத்தகைக்காரனால் அங்கு

வரி வசூலே செய்ய முடியவில்லை. குத்தகைக்காரனுக்கும் ஜனங்களுக்கும் தகராறு விளைந்துகொண்டே இருக்கிறது. சிறு பொறி விழுந்தால் போதும்; பெரு நெருப்புப் பற்றிக்கொண்டுவிடும்!

வெள்ளை : ஏன்? அங்குக் குத்தகைக்காரனுக்கு உதவியாக நவாபின் படை வீரர்கள் இல்லையா?

சின்ன : இருக்கிறார்கள். ஆனால் பெயருக்குத் தான்; சில சிப்பாய்கள் மட்டும் கோட்டையில் காவல் புரிகிறார்கள். அவர்களுக்கும் சேர்த்துக் குத்தகைக்காரன் தான் படியளக்க வேண்டும்.

குத்தகைக்காரனுக்கோ வரிவசூல் செய்வதே பெரும் பாடாயிருக்கிறது. இந்த நிலையில், யானையைக் கட்டித் தீனி போடுவதுபோல், படையைக் கட்டிச் சோறு போட முடியுமா?

வெள்ளை : அப்படியானால் எதிர்பார்த்ததைவிட, சாதகமான நிலைமைதான் என்று சொல்.

சின்ன : ஆம் அண்ணா. நிலைமையைத் தெரிந்து நான் எல்லாவற்றுக்கும் திட்டமிட்டே வந்துவிட்டேன். வருகிற நவராத்திரித் திருவிழாவின்போது கடைசி நாள் நமது நாடு நம் கைக்கு வந்துவிடும். விஜயதசமியன்று நமது வெற்றி விஜயம் பூர்த்தியாகிவிடும். நகரத்து மக்கள் அனைவரையும் சந்தித்து, எனது திட்டத்தை ஒப்புக்கொள்ளச் செய்துவிட்டேன்.

வெள்ளை : உன் திட்டம்தான் என்ன?

Scanned with CamScanner

சின்ன : மிகவும் சுலபமான திட்டம். நவராத்திரியன்று நாமும் இங்குள்ள நமது வீரர்களும் மாறுவேடங்கள் பூண்டு சிவகங்கைச் சீமைக்குச் செல்ல வேண்டும்; சென்று, அங்கு நடைபெறும் நவராத்திரிக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும். ஊர்மக்களும் அவ்வாறே நவராத்திரிக் கொண்டாட்டத்தைக் காரணம் காட்டி, தங்களுடைய வாள், வேல், பாலா முதலிய ஆயுதங்களைத் தூக்கி வரவேண்டும். சிலம்ப விளையாட்டு, கத்தி விளையாட்டு என்று பலவாறு ஆடிப்பாடிக்கொண்டே நாம் மேளதாளத்தோடு இரவில் அரண்மனை வாசலுக்குச் செல்ல வேண்டும். அரண்மனை வாசலில் நமது ஆட்ட பாட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும் போதே ஜனங்களும் நாமுமாகச் சேர்ந்து திடீரென்று தாக்குதல் நடத்தி, அரண்மனையைக் கைப்பற்ற வேண்டும். இதுதான் திட்டம்.

வெள்ளை : சபாஷ், சின்னமருது! அற்புதமான திட்டம். எதிரிகள் எந்த விதத்திலும் நம்மைச் சந்தேகிக்கவும் முடியாது; சந்தேகித்தாலும் அத்தனை கூட்டத்தில் அவர்களால் ஒன்றும் சாதிக்கவும் முடியாது. மகாராணி! தம்பி சொன்னதைக் கேட்டீர்களா!

வேலு : பிரதானியாரே, திட்டம் நல்லதாகத்தான் தோன்றுகிறது. நிறைவேற்றுவதில்தான் திறமை வேண்டும்.

வெள்ளை : அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம், மகாராணி. நவராத்திரி விழா மகிஷாசுர

Scanned with CamScanner

மர்த்தனியான பராசக்தி கொலு அமர்ந்த நாள் என்று சொல்வார்கள். அதே தினத்தில், அதே திருநாளில், இந்த நவாபின் ஆட்சியைக் குழி தோண்டிப் புதைத்து ராணி வேலு நாச்சியாரை நான் சிவகங்கைச் சிம்மாசனத்தில் கொலு அமரச் செய்கிறேனா, இல்லையா, பாருங்கள்! நவராத்திரி! நவராத்திரி! (மெல்லச் சிரிக்கிறான்).

- திரை -

## காட்சி – 14

**இடம்** : (சிவகங்கை) கோட்டை வாசல்

**பாத்திரங்கள்** : சின்ன மருது, வெள்ளை மருது, சிப்பாய்கள் - 1, 2, 3, கிராமவாசிகள் - 1, 2, வேஷதாரிகள், விளையாட்டுக் காரர்கள், பொதுஜனாங்கள்.

(கோட்டை வாசலில் இரண்டு சிப்பாய்கள் (2,3) எதிரெதிராக நடந்து காவல்புரிகிறார்கள். சிப்பாய் - 1 கோட்டைச் சுவரருகே சாய்ந்து இருந்தவாறே குறட்டைவிடுகிறான். பின்னர், சிப்பாய்கள் 2ம் 3ம் ஒருவருக்கொருவர் 'காதைக் கடித்து'க் கொள்கிறார்கள். லேசாகச் சிரிக்கிறார்கள்).

**சிப். 3** : (சிப்பாய் - 1ன் காதருகே சென்று) *பாரா உஷார்!*

(சத்தத்தைக் கேட்டு, குறட்டைவிட்ட சிப்பாய் திடுக்கிட்டு விழித்தெழுந்து சலாம் போடுகிறான்.

Scanned with CamScanner

அதைக் கண்டு சிப்பாய்கள் 2-ம், 3-ம் சிரிக்கிறார்கள்).

சிப். 1 : (ஏமாந்தவனாய்) அட, பாவிங்களா? நான் ஜமேதார் சாய்புதான் வந்துட்டாராக்கும்'னு லே பயந்துபோயிட்டேன்!

சிப். 3 : ஜமேதார் சாய்பு ஏண்டா இங்கே வரப்போறாரு? இந்நேரத்திலே அவர் எங்கேயாவது ஜல்ஸா பண்ணிக்கிட்டிருப்பாரு. நாமதான் இங்கே கிடந்து நாயாட்டம் காய வேண்டியிருக்கு!

சிப். 2 : ஏம்ப்பா சலிச்சிக்கிறே? நாம என்ன, சும்மா சக்காத்தாவா காவல் புரியுறோம்? வாங்கிற சம்பளத்துக்கு வஞ்சகமில்லாமல் உழைக்க வேண்டாமா?

சிப். 3 : 'ஆமா! சம்பளத்தை ரொக்கம் ரொக்கமா அளந்து போடுதான்'லெ நம்ம குத்தகைக்கார சாய்பு. அவன் ஜனங்களிடம் வரிப்பணத்தைப் பிரிக்க ஏழு குட்டிக்கரணம் போட்டால், நாம இவன்கிட்டே சம்பளக் காசை வசூலிக்கிறதுக்கு தொண்ணித்தி யேழு குட்டிக்கரணம் போட வேண்டியிருக்கு.

சிப். 1 : நல்லாச் சொன்னே, போ. நம்ம நவாப் என்னடான்னா, கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைச்ச கதையிலே இந்தச் சிவகங்கைச் சீமையை இந்தக் குத்தகைக்காரனிடம் அடகு வச்சிட்டுப் போயிட்டாரு.

சிப். 2 : சீமையை மட்டுமா அடகு வச்சாரு? நம்ம சீவனையுமில்லா அடகு வச்சிட்டுப்

போயிட்டாரு. ஊர் ஜனங்களோ நம்மைப் பார்த்து, குட்டி போட்ட பொட்டை நாய் மாதிரி முறைக்கானுக. வெளியே ஒத்தை சித்தையிலே நடமாடக்கூடப் பயமாயிருக்கு!

சிப். 1 : பயமாயிருக்கா! இந்த அழகிலே நீ சிப்பாய் உத்தியோகத்துக்கு வேறே வந்துட்டே பெரிய வீரன்தாம்பா நீ!

சிப். 2 : போடா, போ, இவரு பெரிய வஸ்தாது. எவருக்குமே பயப்படமாட்டாரு! ஆளைப்பாரு! உனக்கு இந்த மறவர் சீமையோடே வளமை தெரியாது போலிருக்கு. கவாத்துப் பழகின சிப்பாயையெல்லாம் காத்தாப் பறத்தி எடுத்திடுவான்கள், அப்போ! நாம கொஞ்சம் அசந்து மறந்திட்டா, நம்ம தலையையே அபேஸ் பண்ணிடுவாங்க. தெரிஞ்சுக்கோ.

சிப். 3 : சரி சரி, பேச்சை விடுங்க. என்னமோ நம்ம தலைவிதி. இங்கே வந்து இப்படிச் செத்துப் புழைக்கணும்னு எழுதியிருக்கு. என்னவோ நவாப் சேனையிலே சேர்ந்தா, கஞ்சித் தண்ணிக்குக் கவலை இல்லையேன்னு சேர்ந்தோம். இந்தக் குத்தகைக்காரப் பய ராச்சியத்திலே அதுக்குக் கூட ஆபத்தாயிருக்கும் போலிருக்கு.

சிப். 1 : அட, போண்ணே. நல்லாத் தூங்கிக்கிட்டிருந்தவனை உசுப்பி விட்டுட்டீங்களே. கரும்பு போல வந்த தூக்கத்தைக் கெடுத்திட்டு, இப்போ குரங்கு போல முழிச்சிக்கிட்டு இருக்க வேண்டியிருக்கு.

**சிப். 3** : ஏண்டா, இதுதானா நீ பாரா கொடுக்கிற லட்சணம்? சரி சரி, தூங்கு. இங்கே என்ன, குபேர பட்டணமா கொள்ளை போகப்போவுது?

(இந்தச் சமயத்தில் பின்னணியில் மேளச் சத்தம் கேட்கிறது).

**சிப். 1** : அது என்னண்ணே சத்தம்? கொட்டு மேளம் கேக்குது. அதுவும் இந்நேரத்திலே.

**சிப். 3** : ஏண்டா, இன்னைக்கித் தசராத் திருவிழான்னு உனக்குத் தெரியாது? இன்னைக்கிக் காலையிலேயிருந்து எங்கே பார்த்தாலும் ஒரே ஆட்டமும் பாட்டமுமாத்தானே இருக்கு. தசராத் திருவிழா இந்த ஊரிலே ரொம்ப விசேஷம் போலிருக்கு.

**சிப். 1** : அப்படின்னா வாண்ணே. நாமும் போய்க் கொஞ்சம் வேடிக்கை பாத்துட்டு வரலாம்.

**சிப். 3** : அப்புறம் அங்கே அரண்மனையைக் காவல் காக்கிறது யாரு? சின்னக் கிழவனா காவல் காப்பான்?

**சிப். 1** : அதுக்குத்தான் நீங்க இருக்கியளே! போறாது?

**சிப். 2** : நில்லுங்க. அந்த மேளதாளமெல்லாம் அரண்மனையை நோக்கித்தான் வருது. நாம இங்கேயே நின்னு பார்க்கலாம். இதோ வந்துட்டுது.

(பின்னணியில் பம்பை முதலிய மேள வாத்திய சப்தம்; நையாண்டி மேளம். மேடை மீது முதலில் ஒரு புலி வேஷக்காரன் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, ஆடிப் பாய்ந்து 'பாவலா' காட்டி வருகிறான். பின்னர், சிலம்ப

வித்தைக்காரர்கள் ஆடி வருகிறார்கள். கடைசியாக இரண்டு கோமாளிகள் ஆடிப்பாடிக்கொண்டே வருகிறார்கள். அவர்களோடு சின்னமருது வெள்ளை மருது இருவரும் மாறுவேடத்தில் ஆடிவருகிறார்கள். அத்துடன் சேவகர்களும் பொதுஜனங்களும் வருகிறார்கள். எல்லாரிடமும் ஆயுதங்கள் இருக்கின்றன. கோட்டை வாசலில் கோமாளிகளும் மருது சகோதரர்களும் ஆடுகிறார்கள். சிப்பாய்கள் அனைவரும் ஓரமாக ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள்).

(பாட்டு)

கோமாளி 1 : திருப்பதிக்குப் போயி வந்தேன் நாராயணா!

கோ. 2 : திருமொட்டையும் அடிச்சி வந்தேன் நாராயணா!

கோ. 1 : அங்கே ஒரு சாளக் கொல்லை நாராயணா!

கோ. 2 : அதிலே ஒரு கதிர் ஒடிச்சேன் நாராயணா!

கோ. 1 : கொல்லைக்காரன் கண்டுக்கிட்டான் நாராயணா!

கோ. 2 : கோலைக்கொண்டு அடிச்சிப்போட்டான் நாராயணா!

("அடிச்சிப் போட்டான் நாராயணா! அடிச்சிப் போட்டான் நாராயணா!" என்று திரும்பத் திரும்பப் பாடுகிறான். பாட்டின் தாளகதி துரிதமடைகிறது; வேகம் ஏறுகிறது. மேள வாத்தியமும் அதே துரித கதியில் இயங்குகிறது. திடீரென்று சின்ன மருது வாளை உருவிக்கொண்டு சிப்பாய்கள் மீது பாய்கிறான்.)

சின்ன : *வீரர்களே! தாக்குங்கள்! கொல்லுங்கள்! குத்துங்கள்! வெல்லுங்கள்! வீழ்த்துங்கள்!*

(சிப்பாய்களுக்கும் சின்னமருது கோஷ்டியினருக்கும் மோதுதல் ஏற்படுகின்றது. சிறிது நேரம் வாளும் வேல்கம்பும்.

மோதுகின்றன. கடைசியில் சிப்பாய்கள் தோற்று ஓடுகிறார்கள்).

சின்ன : வீரர்களே! அரண்மனைக்குள் செல்லுங்கள். எதிரிகள் எவரையும் உயிருடன் விட்டு வைக்காதீர்கள். அரண்மனையைக் கைப் பற்றுங்கள். ஆயுதங்களைப் பறிமுதல் செய்யுங்கள். ...ம், செல்லுங்கள் முன்னே! வெற்றி நமக்கே!

கோ. 1 : வாழ்க சிவகங்கை!

எல்லாரும் : வாழ்க சிவகங்கை!

கோ. 1 : வாழ்க வேலு நாச்சியார்!

எல்லா : வாழ்க வேலு நாச்சியார்!

கோ. 1 : வாழ்க மருது சகோதரர்!

எல்லா : வாழ்க மருது சகோதரர்!

(எல்லாரும் ஆரவாரித்தவாறு உள்ளே செல்கின்றனர்).

- திரை -

## காட்சி - 15

இடம் : (சிவகங்கை) அரண்மனை அந்தப்புரம்.

பாத்திரங்கள் : வேலு நாச்சியார், வெள்ளை மருது.

(வேலு நாச்சியார் சர்வாலங்கார பூஷிதையாக ஒரு நிலைக்கண்ணாடியின் முன்னின்று தனது அலங்காரத்தை அங்குமிங்கும் திரும்பிப் பார்த்து, அழகு பார்த்துக் கொள்கிறாள். கழுத்தில் ஒரு இரத்தினமாலை அணிந்து அழகு

Scanned with CamScanner

பார்க்கிறாள். அவளது வாய் ஏதோ ஒரு குதூகலமான இன்னிசையைத் தனக்குத்தானே முணுமுணுக்கிறது. இந்தச் சமயத்தில் வெள்ளை மருது உள்ளே வருகிறான். வெள்ளை மருது வந்ததைக் கூடக் கவனியாமல், அவள் தன்னை அழகு பார்ப்பதிலேயே இலயித்திருக்கிறாள். எனவே வெள்ளை மருது மெல்லக் குரல் கொடுக்கின்றான்).

வெள்ளை : *மகாராணி!*

வேலு : *(திடுக்கிட்டுத் திரும்பி) தாங்களா? தாங்கள் எப்போது வந்தீர்கள்?*

வெள்ளை : *இப்போதுதான், மகாராணி! மகாராணி, பொது மக்கள் தங்கள் தரிசனத்துக்காகச் சபையில் காத்து நிற்கிறார்கள். தங்களுக்கு நான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேன். தங்களை மீண்டும் இந்தச் சீமைக்கு ராணியாக்கிவிட்டேன். இப்போது தங்கள் மனக்குறையெல்லாம் தீர்ந்து விட்டதல்லவா, மகாராணி?*

வேலு : *இல்லை. பிரதானியாரே! இன்னும் ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது.*

வெள்ளை : *இன்னும் என்ன குறை மகாராணி?*

வேலு : *எல்லாம் உம்மைப் பற்றிய குறைதான்.*

வெள்ளை : *(வியந்து) என்னது? என்னைப் பற்றியா? ஒன்றும் புரியவில்லையே, மகாராணி?*

வேலு : *புரியாதுதான்! பிரதானியாரே! நீரே நெஞ்சில் கையை வைத்துச் சொல்லும். நான் உம்முடைய ராணியென்று தெரிந்திருந்தும், நீர் என்னை அந்தரமாகக் காதலித்தீர்; காதலித்தும் வருகிறீர்!*

வெள்ளை : *(குறுக்கிட்டு) மகாராணி, நான் -*

Scanned with CamScanner

வேலு : (வெட்டிப் பேசி) உம்முடைய விளக்கமே எனக்குத் தேவை இல்லை. இந்தச் சிவகங்கைச் சீமையை விட்டு வெளியேறிய நாள் முதல் உம்மை அறிந்து வருகிறேன்.

அன்றுமுதல் நீர் என்னையே எண்ணியெண்ணி உருகியதையும், என் காதலுக்காக ஏங்கித் தவித்து, என் வாயிலிருந்து ஏதாவது ஒரு அன்பான வார்த்தை வந்துவிடாதா என்று எதிர்பார்த்துத் துடித்ததையும் நான் அறிவேன். இந்தக் குற்றத்தை நீர் புரிந்தது உண்டா, இல்லையா?

வெள்ளை : மகாராணி.

வேலு : கேட்டதற்குப் பதில்! உண்டா, இல்லையா?

வெள்ளை : ஆம், மகாராணி.

வேலு : குற்றத்தை நீரே ஒப்புக்கொண்டுவிட்டீர். நீர் செய்த குற்றத்துக்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?

வெள்ளை : தெரியும். சிரச்சேதம்!

வேலு : அவ்வளவுக்குக் கொடுமைக்காரியல்ல நான். உமக்குரிய தண்டனை சிரச்சேதம் அல்ல; சிறைவாசம்! (சிரிக்கிறாள்) ஆம்; சிறைவாசம். நீர் செய்த குற்றத்துக்குத் தண்டனையாக, நான் உம்மை என் இதயச் சிறையிலேயே ஆயுள்காலம் முழுதும் அடைத்து வைக்கத் தீர்மானித்து விட்டேன்!

வெள்ளை : (வியந்து) மகாராணி!

Scanned with CamScanner

வேலு : ஆம், உங்களைத் திருமணம் செய்துகொள்ளத் தீர்மானித்துவிட்டேன்!

வெள்ளை : உண்மையாகவா?

வேலு : ஆம். (பெருமூச்செறிந்து) தாங்கள் அறியாத ஒரு உண்மையை நான் சொல்கிறேன். தங்களை நான் என்று முதன்முதலில் சந்தித்தேனோ, அன்றே என் மனம் என்னையும் மீறித் தங்கள்பால் அலைபாயத் தொடங்கிவிட்டது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அந்த ஆவலை இன்றுவரை வளர்க்கத்தான் உதவின. இல்லையெனில் நான் என்றோ என்னுயிரை மாய்த்திருப்பேன். தெய்வம்தான் என்னை இந்த முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது போலிருக்கிறது. எனவே நான் தங்களை மணப்பதென்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

வெள்ளை : (தயங்கி) வந்து -

வேலு : என்ன யோசிக்கிறீர்கள்? மறவர்குலப் பெண்கள் மறுமணம் புரிந்துகொள்வது மரபுக்கு விலக்கல்ல. மேலும் நம்மிடையே பிறர் மறுத்துச் சொல்லக் கூடிய குல வேறுபாடும் இல்லை. நாம் இருவருமே முக்குலத்தைச் சேர்ந்தவர்கள். தங்களுக்குச் சம்மதம் தானே?

வெள்ளை : என்ன சொல்வதென்றே தெரியவில்லை, மகாராணி.

வேலு : இனி நான் தங்களுக்கு மகாராணியல்ல; மனைவி.

(நிலைக்கண்ணாடி முன்னுள்ள குங்குமச் சிமிழை எடுத்து வந்து வெள்ளை மருதுவிடம் கொடுக்கிறாள்).

Scanned with CamScanner

இதோ இந்தக் குங்குமத்தால் என் நெற்றியில் தங்கள் கையால் திலகமிடுங்கள்; திலகமிட்டு என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்.

வெள்ளை : (திலகமிட்டவாறே) வேலு! இதோ இந்தக் கணத்தில் நான் அடைந்த இன்பத்தைப்போல், என் வாழ்க்கையில் நான் என்றுமே இன்பம் கண்டதில்லை உன்னுடைய இந்தத் தியாக புத்தி..

வேலு : தியாகம் செய்தவர்கள் தாங்கள்தான் மன்னவா! என்னை மீண்டும் ராணியாக்குவதற்காகத் தாங்கள் எத்தனை சிரமங்களை, தியாகங்களை மேற்கொண்டீர்கள். தங்கள் காதலைக் கூட அல்லவா மறைத்து வைக்க முயன்றீர்கள்! தாங்கள் மேற்கொண்ட தியாகத்துக்கு நான் பரிசுதான் தந்திருக்கிறேன். என்னையே தந்து விட்டேன்.

வெள்ளை : சரி, வேலு! சபை காத்துக்கொண்டிருக்கிறது. சீக்கிரம் புறப்படு.

வேலு : வாருங்கள், தம்பதி சமேதராகவே போகலாம்.

(இருவரும் சிரிக்கிறார்கள்).

- திரை -

Scanned with CamScanner